# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



## நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம், விழுப்புரம் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை: திரு.M.ஸ்ரீதர், B.E., M.Plan.,

ந.க.எண்.1559/2019/விம					நாள்:14.08.2019

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவுகள்/மனை வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 – நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் – விழுப்புரம் மண்டலம் – கடலூர் மாவட்டம் – சிதம்பரம் வட்டம் – கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியம் – கண்ணங்குடி கிராமம் – ச.எண்கள்.197/1A, 197/2A, 197/2B, 197/2C; 198/1A, 198/1B, 198/2, 198/3A, 198/3B, 198/4–ஆகியவற்றில் 6.11 ஏக்கர் (அ) 266151.60 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ தில்லை நடராஜர் நகர் மற்றும் விரிவு அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

படிக்க:

1) அரசாணை எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [UD(3)] துறை நாள்:04.05.2017
2) அரசாணை எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [UD(3)] துறை நாள்:13.10.2017
3) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2 அவர்களின் செயல்முறை வழிகாட்டுதல் (Operational Guidelines) ந.க.எண்.13193/2017/LA2 நாள்:30.10.2017, 31.10.2017, 07.11.2017, 03.01.2019 மற்றும் 07.01.2019
4) அரசாணை எண்.21, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [UD(3)] துறை நாள்:05.02.2019
5) மனுதாரர் திரு.V. முருகையன், சென்னை அவர்களின் விண்ணப்பம் நாள்:23.07.2019 (Online Application No. DTCP/L/0657264/2017/dt. 13.11.2018)

----

உத்தரவு:

பார்வை (1) மற்றும் (2)ல் காணும் அரசாணையின்படியும் பார்வை (3)ல் காணும் வழிகாட்டி நெறிமுறைகளின்படியும், பார்வை (5)ல் காணும் கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியம், கண்ணங்குடி கிராமம், ச.எண்கள்.197/1A, 197/2A, 197/2B, 197/2C; 198/1A, 198/1B, 198/2, 198/3A, 198/3B, 198/4–ஆகியவற்றில் 6.11 ஏக்கர் (அ) 266151.60 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ தில்லை நடராஜர் நகர் மற்றும் விரிவு என்ற அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொ.ஒ.ம.வ/ ந.ஊ.உ.இ.(வி.ம)எண்.**R666/2019** என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

### மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பளவு | – | 6.11 ஏக்கர் (அ) 266151.60 சதுரஅடி |
| | | |

| | | |
|---|---|---|
| மொத்த மனைகளின் எண்ணிக்கை | – | 113 |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | – | 65 |
| விற்கப்பட்ட மனை எண்கள். | – | 1 to 12, 14 to 65 |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | – | 48 |
| விற்கப்படாத மனைகளின் எண்கள் | – | 66 to 113 |
| விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு | – | 94926.00 ச.அடி |
| திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு | | |
| பூங்கா (மனை எண்.97 முதல் 102 வரை) | – | 9627.00 ச.அடி (10.14%) |
| மனை எண்.13 சாலையாக ஒதுக்கப்பட்டுள்ளது | – | 1200.00 ச.அடி |

## செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்:

### 1) பரிசீலனைக் கட்டணம்:

| | |
|---|---|
| இணைய தளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/– வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | 66 to 113 |

பரிசீலனைக் கட்டணமாக (Scrutiny Fees) மனைப்பிரிவில் உள்ள ஒவ்வொரு விற்பனை செய்யப்படாத மனைக்கும், மனை ஒன்றுக்கு ரூ.500/– வீதம் **www.tnlayoutreg.in** என்ற இணையதள முகவரியில் Online மூலமாகவோ அல்லது The Assistant Director of Town and Country Planning, Villupuram Region அவர்களின் Corporation Bank, Villupuram Branch **Account No. 510101006863315**-ல் மனைப்பிரிவு உரிமையாளரால் செலுத்தப்பட்ட விபரம் உறுதி செய்துகொள்ளப்பட வேண்டும்.

### 2) வரன்முறைப்படுத்தும் கட்டணம் (**Regularisation Charges**) மற்றும் வளர்ச்சிக் கட்டணம் (**Development Charges**)

| மனை எண். | பரப்பளவு | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு) |
|---|---|---|---|
| 66 to 96, 103 to 113 | 7816 ச.மீ | பார்வை (4)ல் காணும் அரசாணையின்படி | |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்கண்டவாறு நேரிலும் செலுத்தப்பட வேண்டும்.

அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான (Regularisation Charges) அரசு கணக்குத் தலைப்பு:

| | |
|---|---|
| **Head of Account:**<br>0217 Urban Development – 60 Other Urban Development Schemes 800 Other Receipts- AT Receipts Under Regularisation Charges of Unapproved layouts and plots – DTCP 27 Non Taxation fees – 30 Regularisation.<br>DPC: 0217-60-800-AT – 2730 | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) வளர்ச்சி கட்டணம் (Development Charges) கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தப்பட வேண்டும்.

வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண்.————————————————

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

பார்வை (1) மற்றும் (2)ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1) அரசாணை (நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்: 13, 10,17–ல் விதி எண்.7(g)(ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

இணைப்பு:
மனைப்பிரிவு வரைபடம் – 2 நகல்கள்

14/8/19

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
விழுப்புரம் மண்டலம்,
விழுப்புரம்.

14/8/19

பெறுநர்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியம்,
சிதம்பரம் வட்டம்,
கடலூர் மாவட்டம்.

நகல்:

1) திரு.V. முருகையன்,
த/பெ. விருத்தாசலம்,
எண்.Flat No.5, Door No.10
வேலு தெரு,
மேற்குமாம்பலம்,
சென்னை – 600 033

2) உதவி இயக்குநர் (நில அளவை)
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
கடலூர் மாவட்டம்.

3) வட்டாட்சியர்,
சிதம்பரம் வட்டம்
கடலூர் மாவட்டம்.

(2, 3) சாலை மற்றும் பூங்கா பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சி பெயரில் மாற்றம் செய்யும் பொருட்டு.

4) சார்பதிவாளர்,
சிதம்பரம் சார்பதிவாளர் அலுவலகம்,
சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம்

சாலை மற்றும் பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு

5) உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
கடலூர் மாவட்டம்.

**கீரப்பாளையம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: திரு. சி. சுப்ரமணியன்**

ந.க.எண்: ஆ2/2085 /2019

நாள்: 14 .11.2019

பொருள்: மனைப்பிரிவு அங்கீகாரம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை – கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியம் கீரப்பாளையம் ஊராட்சி, கண்ணங்குடி கிராமம் சர்வேஎண்கள்: 197/1A, 197/2A, 197/1B, 197/2C, 198/1A, 198/1B, 198/2, 198/3A, 198/3B, 198/4 ல் உள்ள 6.11 ஏக்கர் (அ) 266151.60 சதுரடி பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ தில்லை நடராஜர் நகர் மற்றும் விரிவுஎன்ற மனைப்பிரிவில் 42 மனைகள் விற்கப்படாதது கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கியது 42 மனைகள் வரன் முறைப்படுத்தி ஆணையிடுதல் – தொடர்பு.

பார்வை:

1) அரசாணை எண்: 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD(3) துறை நாள்: 04.05.2017.
2) அரசாணை எண்: 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD(3) துறை நாள்: 13.10.2017.
3) நகர ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்: 1559/2019 வி.ம நாள்: 14.08.2019.
4) திரு.V.முருகையன், த/பெ விருத்தாசலம், Flot.no. 5, கதவு எண்.10 வேலு தெரு, மேற்குமாம்பலம் சென்னை அவர்களின் கடிதம் நாள்: 23.07.2019

----

**உத்தரவு–**

கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியம், கண்ணங்குடி கிராமம் சர்வேஎண்கள்: 197/1A, 197/2A, 197/1B, 197/2C, 198/1A, 198/1B, 198/2, 198/3A, 198/3B, 198/4ல் உள்ள 6.11 ஏக்கர் (அ) 266151.60 சதுரடி பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ தில்லை நடராஜர் நகர் மற்றும் விரிவுஎன்ற மனைப்பிரிவில் நகர ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் அவர்களின் பார்வை 3–ல் காணும் செயல்முறை ஆணையில் கொள்கை அளவில் மனையினை வரன்முறை செய்து மனைப்பிரிவிற்கு கடிதம் எண்: 1559/2019/வி.ம நாள் 14.08.2019 மற்றும் DTCP அங்கீகார எண்: R666/2019–ல் ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவு முறைப்படுத்த உள்ளாட்சி நிர்வாகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களை நிர்ணயம் செய்து விழுப்புரம் நகர ஊரமைப்பு உதவி இயக்குநர், அவர்களில் ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் ஆணையின் அடிப்படையில் திரு.V.முருகையன், த/பெ விருத்தாசலம் என்பவரால் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீ தில்லை நடராஜர் நகர் மற்றும் விரிவு மனைப்பிரிவில் விற்பனைசெய்யப்படாத 42 மனைகளுக்கு மட்டும் வரன் முறைக்கட்டணம் அரசு தலைப்பிலும் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் உள்ளாட்சி நிறுவனத்திற்கு முறைப்படுத்துவதற்காக 12.11.2019 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | மனை எண் | பரப்பளவு (ச.அடி) | வரன்முறை கட்டணம் ரூ.37.50– ச.மீ | வளர்ச்சி கட்டணம் ரூ. 25/– ச. மீ | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | ஸ்ரீ தில்லை நடராஜர் நகர் மற்றும் விரிவு<br>66 to 96, 103 to 113,<br>(42 மனைகள் மட்டும்) | 84099.00 | 293100 | 195400 | 42 8500 |
| | மொத்தம் | | 293100 | 195400 | 42 8500 |

திரு.V.முருகையன், த/பெ விருத்தாசலம் என்பவரால் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீ தில்லை நடராஜர் நகர் மற்றும் விரிவு மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு பரிசீலனைக் கட்டணம் தலா ரூ.500/– வீதம் இணையதள வழியாக நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை 2–ல் காணும் அரசாணையின்படி, இம்மனைபிரிவில் விற்பனை செய்யப்படாத மனையின் மொத்த பரப்பளவில் 10.14%(மனை எண்:97 to,102 வரை) (9627.00 ச.அடி) பொதுவிடத்திற்கான நிலம் மனைப்பிரிவு உரிமையாளரால் 9627.60 சதுர அடி தனி அலுவலர்/ வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

வரன்முறைக்கட்டணம் ரூ. 293100/–12.11.2019 அன்று அரசு தலைப்பிலும் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் ரூ.195400/–12.11.2019–ல் அன்று மேற்படி அட்டவணையில் கலம் 5–ல் குறிப்பிட்டுள்ள மனைகளுக்கு மட்டும் BDO VP Development Charges என்ற பெயரில் ICICI வங்கி, ஒரத்தூர் கணக்கு எண்:610101001379–ல் நேரடியாக மனுதாரரால் செலுத்தப்பட்டது. மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பூங்காக்கள் உள்ளாட்சி அமைப்பிற்கு மனுதாரரால் சிதம்பரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்:1/4319/2019 நாள்:13.11.2019 அன்று தனிஅலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), கண்ணங்குடி ஊராட்சி, கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியம் என்ற பெயரில் தான பத்திரம் செய்து ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கண்ணங்குடி ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் திரு.V.முருகையன், த/பெ விருத்தாசலம் அவர்களால் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீ தில்லை நடராஜர் நகர்மற்றும் விரிவு மனைப்பிரிவுக்கு நகர ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் அவர்களின் கொள்கை அளவிலான வரன்முறை ஆணை மற்றும் உள்ளாட்சி நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் முறைப்படி மனுதாரரர் செலுத்தியதின் அடிப்படையில் வீட்டு மனை எண்கள் ஸ்ரீ தில்லை நடராஜர் நகர் மற்றும் விரிவு **66, 67, 68,69,70, 71, 72, 73, 74, 75, 76, 77, 78, 79, 80, 81, 82, 83, 84, 85, 86, 87, 88, 89, 90, 91, 92, 93, 94, 95, 96, 103, 104, 105, 106, 107, 108, 109, 110, 111, 112, 113** ஆகிய 42 மனைகளுக்கு கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வரன் முறைப்படுத்தி ஒப்புதல் வழங்கி ஆணையிடப்படுகிறது.

## நிபந்தனைகள்

1) மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைகள், நீர்நிலைகள், அரசு புறம்போக்கு, திறந்த வெளி ஒதுக்கீடு அடுத்த நிலத்திற்கு வழியாக அமையும் காலிமனை, உத்தேச சாலை மற்றும் Rail Corridors, பொதுப்பாதை மற்றும் நில உச்ச வரம்பு சட்டத்தின்படி உள்ள மனையிடம், அதிக உயர்மின்னழுத்த பாதை கீழ் அமைந்திருக்கக்கூடாது.
2) அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு மனைக்கும் செலுத்தப்பட வேண்டிய காலி மனை வரி (Vacant Land Tax) கட்டணங்கள் கேட்பு (Demand Notices) செய்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் ஆண்டுக்கு 6% என்ற விகிதத்தில் வட்டியுடன் செலுத்தப்பட வேண்டும்.
3) மனைப்பிரிவு கட்டமைப்பு (Frame Work) செய்த இம்மனைப்பிரிவில் அமையும் மனையின் உரிமையாளர்கள் அவர்களின் மனையை முறைப்படுத்தப்படாமல் இருப்பின் மின்சாரம், தெரு விளக்கு, குடிநீர், கழிவுநீர் வடிக்கால் அமைப்பு துண்டிக்கப்படும் மற்றும் சாலை வசதி செய்து கொடுக்க இயலாது.
4) மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் முறைப்படுத்தப்பட்டதாக கருதப்படாது.
5) இம்னைப்பிரிவின் நிலங்கள் தொடர்பாக மனைப்பிரிவு உரிமையாளர், சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்று சமர்ப்பித்த வில்லங்க சான்றின் சரி தன்மையை உறுப்பினர் செயலர் உள்ளூர் திட்டக்குழுமம் விழுப்புரம் அவர்களின் உறுதி செய்து வழங்கிய செயல்முறை ஆணையின் அடிப்படையில் மனைப்பிரிவு முறைப்படுத்தப்பட்டது. இதில் ஏதேனும் தவறுகள் அல்லது ஆவணங்களின் சரிதன்மை குறித்து புகார்கள் கண்டறியப்படின் ஒட்டுமொத்த மனைகளின் அங்கீகாரம் ரத்து செய்யப்படுவதுடன் சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
6) மேற்காணும் நகரில் முறைப்படுத்தப்படாத மனைகள் ஏதேனும் மறு பதிவு செய்ய வேண்டாமென்று சார்பதிவாளர், பத்திர பதிவுத்துறை, சிதம்பரம், கேட்டுக் கொள்ளப்படுகிறார். (இம்மனையினை பிற்காலத்தில் வரன்முறை செய்யப்பட்டால் அதன் விவரத்தினை தங்களுக்கு தனியே தெரிவிக்கப்படும் அதன் பிறகு அம்மனைகளை மறுபதிவு செய்வது குறித்து பதிவு துறையின் வாயிலாக பரிசீலிக்க வேண்டும்).


14/11/19
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
கீரப்பாளையம்.

14.11.19

பெறுதல்:

திரு.V.முருகையன்,
த/பெ விருத்தாசலம்
Flot no. 5,கதவு எண்.10
வேலு தெரு,
மேற்குமாம்பலம்
சென்னை 600033

நகல்: நகர ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம்.
நகல்: உதவி இயக்குநர் (ஊராட்சிகள்/ தணிக்கை), கடலூர்.
நகல்: சார்பதிவாளர், பத்திர பதிவுத்துறை, சிதம்பரம்.
நகல்: தனி அலுவலர், கண்ணங்குடி ஊராட்சி (உரிய நடவடிக்கைக்காக)
நகல்: இருப்பு கோப்பிற்கு.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals


Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate